





செய்திவெளியீடு எண்.12/2017 நாள்: 22.02.2017

## கல் குவாரிகளில் உள்ள நீரை குடிநீராக பயன்படுத்த நிபுணர்கள் மூலம் ஆய்வு – குடிநீர் வாரியம் நடவடிக்கை

-------

சென்னைப் புறநகர் பகுதிகளிலுள்ள கல்குவாரிகளில் தேங்கியிருக்கும் மழைநீரை சென்னை மக்களின் குடிநீர் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்த முடியுமா என்பதற்கான ஆய்வுகளை மேற்கெள்ள சென்னைக் குடிநீர் வாரிய பொறியாளர்களுக்கு குடிநீர் வாரிய இயக்குநர் திரு.வி. அருண்ராய், இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தி இருந்தார்கள்.

மேலாண்மை இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க கல்குவாரிகளில் தேங்கி இருக்கும் மழைநீர் குடிநீர் பயன்பாட்டிற்கு உகந்ததா என்பதற்கான ஆய்வுகளையும், குவாரிகளில் தேங்கியுள்ள மழைநீரின் இருப்பு குறித்த ஆய்வுகளையும் சென்னைக் குடிநீர் வாரிய பொறியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னைப் புறநகரிலுள்ள மாங்காடு பகுதியில் 22 குவாரிகளும் திருநீர்மலையில் 3 குவாரிகளும் பம்மலில் 3 குவாரிகளும் நன்மங்கலத்தில் 3 குவாரிகளும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் குவாரிகளில் உள்ள நீரின் தரம் மற்றும் அளவீடுகள் குறித்து தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீரின் தரம் குறித்து கிங்நிலையம் (கிண்டி) மற்றும் அண்ணா பல்கலைக் கழக சுற்றுச் சூழல் மற்றும் புவி அமைப்பியல் துறையும் குவாரிகளின் நீர் இருப்பு குறித்து எம்.ஜி.ஆர். பொறியியல் கல்லூரி , சிவில் பொறியியல் துறையும் ஆய்வு செய்து வருகின்றனர்.

குவாரிகளிலுள்ள நீர் பயன்பாட்டிற்கு உகந்தது என்று கண்டறியப்பட்டால் கோடையை சமாளிக்கும் விதத்தில் இந்தக் குவாரிகளிலுள்ள நீரைப் பயன்படுத்திக் கொள்ள வாரியம் முடிவெடுத்துள்ளது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்